தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

## 24.07.2013

### விவசாயிகளின் பயிர் காப்பீடு கட்டணத்தை அரசே செலுத்த வலியுறுத்தல்

வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் பயிர் காப்பீடு கட்டணத்தை தமிழக அரசே செலுத்த வேண்டும் என தமிழக உழவர் முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

தமிழக உழவர் முன்னணி மாவட்டச் செயற்குழுக் கூட்டம் சிதம்பரத்தில் திங்கள்கிழமை நடைபெற்றது.மாவட்டத் தலைவர் அ.கோ.சிவராமன் தலைமை வகித்தார். கடலூர் மாவட்டச் செயலர் சி.ஆறுமுகம், மாவட்ட துணைச்செயலர் ரா.சரவணன், கீரப்பாளையம் ஒன்றியச் செயலர் என்.ஜெயபாலன், குமராட்சி ஒன்றியச் செயலர் தங்க.கென்னடி, செயற்குழு உறுப்பினர்கள் கோ.வெங்கடாசலம், வெ.பொன்னுசாமி, பொன்னந்திட்டு அ.மதிவாணன், மேலமூங்கிலடி சி.ராஜேந்திரன், பன்னப்பட்டு மு.சம்பந்தம் உள்ளிட்டோர் பங்கேற்றனர். வறட்சியைக் காரணம் காட்டி கடந்த ஆண்டு கர்நாடக அரசு தமிழகத்துக்குரிய நீரைக் கொடுக்க மறுத்தது.

இந்த ஆண்டு அணைகளில் நீர் இருந்தும் இறுதி தீர்ப்பின்படி ஜூன் மாதம் கொடுக்க வேண்டிய நீரை கர்நாடகம் திறந்துவிடவில்லை. கர்நாடக அரசின் இச்செயலை முறியடிக்கும் வகையில் தமிழக அரசு இறுதி தீர்ப்பின்படி வாரந்தோறும் தர வேண்டிய நீரை முறையான அறிவிப்பு கொடுத்து திறந்துவிடும்படி வலியுறுத்தி வேண்டும்.மாதந்தோறும் பெற வேண்டிய நீர் அம்மாதத்திலேயே பெறப்பட வேண்டும். அதற்கான மேலாண்மை வாரியத்தை

அமைக்க தமிழக அரசு அனைத்துக் கட்சிகள், உழவர் அமைப்புகள் கூட்டத்தைக் கூட்டி பிரதமருக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என கோருவது.வீராணம் ஏரியில் ஏற்கெனவே படகு விடும் திட்டம் விவசாயிகள் எதிர்ப்பால் கைவிடப்பட்டது.தற்போது சிறுவர் பூங்கா அமைக்கும் திட்டத்தால் ஏரி நீர் மாசுபடும் ஆபத்துள்ளதால் அத்திட்டத்தை தமிழக அரசு கைவிட வேண்டும். வரும் ஆண்டுகளில் விவசாயிகளின் பயிர் காப்பீடு கட்டணத்தை தமிழக அரசே செலுத்த வேண்டும்.சென்ற ஆண்டு விவசாயிகள் பெற்ற கடனுக்காக செலுத்திய பயிர் காப்பீடு கட்டணத்தை (அரசு காப்பீடு கட்டணத்தை ஏற்றுக் கொண்டதால்) திருப்பித் தர வேண்டும். கூட்டுறவு பயிர் கடன்களின் உச்சவரம்பை ரூ.ஒரு லட்சத்திலிருந்து ரூ.2 லட்சமாக உயர்த்த வேண்டும்.

**விளைநிலப்பரப்பு குறைந்தாலும் விவசாய உற்பத்தியில் கவனம் அவசியம்**

நகரமயமாக்கலால், விளைநில பரப்பு குறைந்து வரும் சூழலில் விவசாயத்தில் உற்பத்தியை மேம்படுத்துவதில் கவனம் செலுத்த வேண்டும் என்று வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் முதன்மைச் செயலர் சந்திப் சக்சேனா தெரிவித்தார்.

வேளாண்மைத் துறை மூலம் ஒருங்கிணைந்த பண்ணையத் திட்டம் செயல்படுத்துவது தொடர்பான கருத்தரங்குக் கூட்டம், விழுப்புரத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இக் கூட்டத்துக்கு மாவட்ட ஆட்சியர் வா.சம்பத் தலைமை வகித்தார். வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் முதன்மைச் செயலர் சந்திப் சக்சேனா பங்கேற்று பேசியது:

வளர்ந்து வரும் சூழலில் நகரமயமாதலை தடுக்க முடியாது. அது அவசியமானதும் கூட. ஆனால் அதே நேரத்தில் விவசாய உற்பத்தி குறையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.   தமிழகத்தில் ஒரு விவசாயிக்கு சராசரியாக 2 ஏக்கர் நிலம் உள்ளது. அதில் ஆண்டொன்றுக்கு ரூ.80 ஆயிரம் முதல் ரூ.1 லட்சம் வரை வருமானம் ஈட்டினால் மட்டுமே குடும்பத்துக்கு தேவையான செலவுகளை மேற்கொள்ள முடியும்.

இதனால் ஒவ்வொரு விவசாயியும் தன்னுடைய பண்ணையில் கிடைக்கும் நீர் மற்றும் நில வளத்துக்கு ஏற்ப சரியான பயிரைத் தேர்வு செய்வதோடு, அதற்கேற்றவாறு உப தொழில்களான கால்நடை வளர்ப்பு, மீன் வளர்ப்பு, பட்டு வளர்ப்பு, கோழி வளர்ப்பு போன்ற தொழில்களை செய்தால் நிலையான வருமானத்தை ஈட்ட முடியும்.

விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு ஒருங்கிணைந்த பண்ணைத் திட்டம் ஒரு வரப்பிரசாதம். பண்ணையில் கழிவுப் பொருள்களை மறு சுழற்சி செய்து மீண்டும் உரமாக மாற்றி வயலில் இடுவதற்கு மண்புழு வளர்ப்பு, சாண எரிவாயு போன்ற தொழில் நுட்பங்களை கடைபிடிக்க வேண்டும். இத் திட்டங்கள் விழுப்புரம் மாவட்டத்தில் கடந்த ஆண்டு கோலியனூர்,திருவெண்ணெய்நல்லூர், ஒலக்கூர், கள்ளக்குறிச்சி ஆகிய வட்டாரங்களில் தலா ஒவ்வொரு கிராமங்களிலும் 12 விவசாயிகளின் நிலங்களில் செயல்படுத்தப்பட்டது. இதற்காக ஒரு விவசாயிக்கு ரூ.90 ஆயிரம் வீதம் மானியம் வழங்கப்பட்டது.

ஒருங்கிணைந்த பண்ணையம் திட்டத்தை, விழுப்புரம் மாவட்டத்தில் நடப்பாண்டு முழுமையாக செயல்படுத்த அரசு திட்டம் தீட்டியுள்ளது. தொடர்ச்சியாக, இத் திட்டத்தை ஆய்வு செய்தல், குழு உருவாக்குதல், தேவைப்படும் பண்ணை முறைகளை தேர்வு செய்தல், திட்டம் செயல்படுத்த முன்னோடி விவசாயிகளை தேர்வு செய்தல், விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தல், இறுதியாக திட்டம் செயல்படுத்துதல் ஆகியவற்றுக்கு செயல்திட்டம் தயார் செய்து செயல்படுத்த வேண்டும் என்றார்.

இக் கருத்தரங்கில் தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் ஆணையர் சத்தியப்பிரதா சாகு, வேளாண்மைத் துறை இயக்குநர் ராஜேந்தரின், சர்க்கரைத் துறை இயக்குநர் மகேசன் காசிராஜன், கூடுதல் வேளாண்மை இயக்குநர் ஹனீஷ் சாப்ரா, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழக முனைவர் சி.சின்னசாமி பேசினர். வேளாண்மை இணை இயக்குநர் ரத்தினசபாபதி நன்றி கூறினார்.

**விவசாயத் தொழிலாளர் சங்க கருத்தரங்கம்**

உளுந்தூர்பேட்டை வட்டம் திருநாவலூர் ஒன்றியம் வானாம்பட்டு கிராமத்தில் அனைந்திந்திய விவசாயத் தொழிலாளர் சங்கம் சார்பில் ஊராட்சி கருத்தரங்கம் திங்கள்கிழமை நடைபெற்றது.

வட்ட பொருளாளர் ஜி.ஏழுமலை தலைமை வகித்தார். கூட்டத்தில் மாநில துணை பொதுச்செயலாளர் மா.வெங்கடேசன், வட்ட செயலாளர் கந்தசாமி, வட்டக்குழு உறுப்பினர் டி.கொளஞ்சி, சேந்தநாடு கிளை தலைவர் அரசன், செயலாளர் ஜெகதாம்பாள், சிபிஐ(எம்.எல்) கிளை செயலாளர் குப்புசாமி, பரமசிவம் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் அரிசி, பருப்பு, மண்ணெண்ணெய் உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்களை மலிவு விலையில் வழங்க வேண்டும், கிராமப்புற ஏழைகளுக்கு கல்வி, மருத்துவம், உரிமையை வழங்க வேண்டும் தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தில் வாணாம்பட்டு, மட்டிகை கிராம மக்களுக்கு உடனடியாக வேலை வழங்க வேண்டும் உட்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**மழை நீரை சேமித்தால் குடிநீர் பிரச்னை தீரும்**

மழை நீரை சேமித்தால் நிலத்தடி நீர்மட்டும் உயரும். அதன் மூலம் இம்மாவட்டத்தில் குடிநீர் பிரச்னை தீரும் என செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊராட்சி தலைவர்களுக்கான மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு கருத்தரங்கில் மாவட்ட ஆட்சியர் கொ.வீரராகவ ராவ் கூறினார்.

திருவள்ளூரில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் நடைபெற்ற ஊராட்சிமன்ற தலைவர்களுக்கான மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு கருத்தரங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் கொ.வீரராகவ ராவ் தொடங்கி வைத்தார்.

இதில் மாவட்ட ஆட்சியர் பேசியது: மழைநீர் சேகரிப்பு மிகவும் முக்கியமானதாகும். இதில் அனைவரும் கவனம் செலுத்த வேண்டும். விவசாயத்துக்கு முன்பெல்லாம் 50 அடி முதல் 100 அடி ஆழம் வரை போர்வெல் போட்டு தண்ணீர் எடுக்கப்பட்டது. இப்போது 200 முதல் 300 அடி ஆழம் வரை போட வேண்டியுள்ளது.

இதுபோல தான் குடிநீருக்கும் நிலத்தடி நீரை அதிக ஆழத்தில் இருந்து எடுக்க வேண்டிய நிலையில் உள்ளோம். 30 ஆண்டுக்கு முன்னர் தண்ணீர் விற்பனை இல்லை. இப்போது பல அளவுகளில் குடிநீர் விற்பனை செய்து வருகின்றனர். இந்நிலைகளை மாற்ற ஒவ்வொருவரும் தங்கள் வீட்டில் மழைநீரை சேகரித்து நிலத்தடி நீர் மட்டம் குறையாமல் பாதுகாக்க முடியும்.

ஊரணிகளுக்கு தண்ணீர் வரும் கால்வாய்களை சுத்தம் செய்து அதில் மழை நீரை சேமித்து வைப்பதால் நிலத்தடி நீர் பெருகும். வீடுகளில் சமையல் அறை மற்றும் குளியல் அறையில் பயன்படுத்தும் நீரை வெளியேற்றும் இடங்களில் கல்வாழை வளர்ப்பதனால் சுத்தமான நீர் கிடைக்கும். இதை நீங்கள் உங்கள் இலலங்களில் செயல்படுத்த வேண்டும்.

கிராமங்களில் பிளாஸ்டிக்கை அறவே தவிர்த்து துணிப்பைகளை பயன்படுத்திட வேண்டும். சமீபத்தில் கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், பாப்பரம்பாக்கம் ஊராட்சி தூய்மையான ஊராட்சியாக தேர்வு செய்யப்பட்டு தமிழக முதல்வரிடம் விருது பெற்றுள்ளார்கள்.

அதுபோல அனைத்து ஊராட்சிகளும் விருது பெற்றிட நீங்கள் முயற்சிக்க வேண்டும். இக் கருத்தரங்கில் கூறப்படும் கருத்துகளை உங்கள் ஊராட்சிகளில் செயல்படுத்தி மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை மேம்படுத்த வேண்டும் என்றார்.

இதில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நிர்வாகப் பொறியாளர் வி. ரவிச்சந்திரன், உதவி இயக்குநர் ஈஸ்வரி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய துணை நில நீர்

வல்லுநர் பா.சம்பத்குமார், தலைமை நீர் பகுப்பாளர் வசந்தி லாரன்ஸ் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர். உதவி நிர்வாக பொறியாளர் சேட்டு நன்றி கூறினார்.

**சொட்டு நீர்ப்பாசன முறையை விவசாயிகள் கற்றுக் கொள்ளவேண்டும்: ஆட்சியர்**

குறைந்த அளவு தண்ணீரில் அதிக மகசூல் பெறும் சொட்டு நீர்ப்பாசன முறையை விவசாயிகள் கற்றுக் கொள்ளவேண்டும் என்று, மாவட்ட ஆட்சியர் எல். சுப்பிரமணியன் வலியுறுத்தியுள்ளார்.

தோட்டக்கலைத் துறை சார்பில், தேசிய நுண்நீர்ப் பாசன விழிப்புணர்வு முகாம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்த முகாமைத் துவக்கிவைத்து ஆட்சியர் பேசியது:

குறைந்து வரும் பாசன நீரைக் கொண்டு வேளாண் உற்பத்தியைப் பெருக்கும் வகையில், நுண்நீர்ப் பாசன முறைகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. சொட்டு நீர்ப்பாசனத்தின் அவசியத்தை கருதி, அரசு அளித்து வரும் மானியத்தை பயனுள்ள வகையில் விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். விவசாயிகளிடம் இருந்து எந்தவித புகாருக்கும் இடமளிக்காமல் இந்தத் திட்டத்தை அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் செயல்படுத்த வேண்டும். அரசு நிர்ணயித்துள்ள விலைப்படி விவசாயிகளுக்கு சொட்டு நீர்ப்பாசனத்தை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்றார்.

நடப்பு நிதியாண்டுக்கு, தோட்டக்கலைத் துறை திட்டங்களில் தேர்வு செய்யப்பட்ட பயனாளிகள் 10 பேருக்கு, மா ஒட்டுக் கன்றுகள், சப்போட்டா, நெல்லி, ரோஜா பதியன்கள், எலுமிச்சை செடிகள், முருங்கை, அவரை விதைகள் மற்றும் நீரில் கரையும் உரம் ஆகியவற்றை ஆட்சியர் வழங்கினார். மேலும், தேர்வு செய்யப்பட்ட 27 பயனாளிகளின் நிலங்களில் சொட்டு நீர்ப்பாசனம் அமைப்பதற்கான உத்தரவுகளை, அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு வழங்கினார்.

ஏற்கெனவே சொட்டுநீர்ப் பாசனம் மூலம் அதிக மகசூல் பெற்ற விவசாயிகள் தங்களது அனுபவங்களை இந்த முகாமின்போது பகிர்ந்து கொண்டனர். இதில், பல்வேறு நிறுவனங்கள் சார்பாக சொட்டுநீர், தெளிப்புநீர், மழை தூவான், அமிலக் கரைசல் கொண்டு சொட்டுநீர் குழாய்களை சுத்தப்படுத்துதல் ஆகிய செயல் விளக்கங்கள் செய்து காண்பிக்கப்பட்டன. வேளாண்மை இணை இயக்குநர் ஜெய்சிங் ஞானதுரை, உதவி இயக்குநர் சி. முத்துதுரை, நபார்டு வங்கி உதவிப் பொது மேலாளர் சங்கரநாராயணன், வேளாண்மை விற்பனை துறை துணை இயக்குநர் மூர்த்தி, உதவிச் செயற்பொறியாளர் பெரியசாமி, மதுரை வேளாண் கல்லூரி உதவிப் பேராசிரியர் ராமர் உள்ளிட்டோர் பேசினர்.

தோட்டக்கலை துணை இயக்குநர் எஸ்.வி.கே. ராஜேந்திரன் வரவேற்றார். உதவி இயக்குநர் த. காமராஜ் நன்றி கூறினார்.

**விவசாய சங்க மாநில செயற்குழுக் கூட்டம்**

கட்சி சார்பற்ற விவசாயிகள் சங்க மாநில செயற் குழு கூட்டம் தெக்கலூரில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது .

இக்கூட்டத்திற்கு கட்சி சார்பற்ற விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் என்.எஸ்.பழனிசாமி, மாநில பொருளாளர் என்.கே.டி பொன்னுசாமி ஆகியோர் தலைமை வகித்தனர். மாநில பொதுச்செயலாளர் மணிவேல், கோவை மாநகர் மாவட்டத் தலைவர் மருத்துவர் தங்கராஜ், மாவட்டத் தலைவர் ஏ.கே.சண்முகம், கொ.ம.தே.க. வடக்கு மாவட்டச் செயலாளர் வி.லோகநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஒன்றிய தலைவர் முத்துசாமி வரவேற்றார்.

இக்கூட்டத்தில், தேர்தல் வாக்குறுதிப்படி, தமிழக அரசு அவிநாசி-அத்திக்கடவு திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். உழவர் பெருந்தலைவர் நாராயணசாமி நாயுடுவுக்கு மணி மண்டபம் கட்ட வேண்டும். கள்ளுக்கானத் தடையை நீக்க வேண்டும். விவசாயப் போராட்டத் தியாகிகள் குடும்பத்தினருக்கு நிவாரணத்

தொகை வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 70.28 அடி**

பவானிசாகர் அணை நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை நிலவரப்படி 70.28 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 6,821 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 900 கனஅடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 11.07 டி.எம்.சி.

**கோபியில் திருந்திய நெல் சாகுபடி செய்ய இலக்கு**

கோபி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் திருந்திய நெல் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

காசிபாளையம், பங்களாபுதூர், டி.என்.பாளையம், கள்ளிப்பட்டி, கணக்கம்பாளையம், பாரியூர், மேவாணி, புதுக்கரைபுதூர், கூகலூர், பி.மேட்டுப்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் தடப்பள்ளி மற்றும் அரக்கன்கோட்டை வாய்க்கால்கள் மூலமாக 24 ஆயிரத்து 500 ஏக்கர் விளை நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.

பழைய ஆயக்கட்டு பாசனப் பகுதிக்காக கடந்த 28-ஆம் தேதி கொடிவேரி அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டது. இதையடுத்து, இப் பகுதிகளில் நாற்றங்கால் அமைக்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. நடப்பாண்டில் 11 ஆயிரத்து 325 ஏக்கரில் திருந்திய நெல் சாகுபடி செய்ய வேளாண் துறையினர் இலக்கு நிர்ணயம் செய்துள்ளனர்.

இதுகுறித்து, கோபி வேளாண்மை உதவி இயக்குநர் ஆசைத்தம்பி கூறியது:

கோபியில் நடப்பாண்டு 11 ஆயிரத்து 325 ஏக்கரில் திருந்திய நெல் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. முதல்போகத்தில் குறுவை சாகுபடியில் மட்டும் 5 ஆயிரத்து 500 ஏக்கரில் சாகுபடி செய்யப்பட உள்ளது. இதுதவிர, 24 கிராமங்களில் திருந்திய நெல் சாகுபடியை முனைப்பாக அமல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சாதாரண நடவு முறையில் கிடைக்கும் மகசூலை விட 20 முதல் 30 சதவீதம் வரை கூடுதலாக கிடைப்பதால், விவசாயிகளுக்கு அதிக லாபம் கிடைக்கிறது. மேலும், முதலீட்டுச் செலவும் கணிசமாக குறைகிறது. தண்ணீர்ப் பற்றாக்குறை உள்ள காலங்களில் குறைந்த தண்ணீரைப் பயன்படுத்தியே கூடுதல் மகசூல் பெற முடியும்.

மேலும், இந்த முறையில் பூச்சி, எலித் தொல்லை குறைவாக இருப்பதால் பயிர் பாதிப்பு ஏற்படுவதில்லை. நடப்பாண்டு விவசாயிகளிடம் திருந்திய நெல் சாகுபடி குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. கோபி வட்டாரத்தில் திருந்திய நெல் சாகுபடிக்கான நாற்றங்கால் அமைப்பதற்கான பயிற்சியை விவசாயிகளுக்கு வேளாண் துறையினர் அளித்து வருகின்றனர்.

**ராசிபுரத்தில் ரூ.46 லட்சத்துக்கு பருத்தி ஏலம்**

ராசிபுரம் வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற பருத்தி ஏலத்தில் ரூ.46 லட்சத்துக்கு வர்த்தகம் நடைபெற்றது.

நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் அருகேயுள்ள வெண்ணந்தூர் வட்டாரப் பகுதியில் பருத்தி சாகுபடி அதிக அளவில் நடந்து வருகிறது. இங்கு சாகுபடி செய்யப்படும் பருத்தி அக்கரைப்பட்டியில் உள்ள ராசிபுரம் வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் வாரம் தோறும் திங்கள்கிழமை நடைபெறும் ஏலத்துக்கு கொண்டு வரப்பட்டு ஏலம் விடப்படும்.

அன்னூர், திருப்பூர், திருச்செங்கோடு, மகுடஞ்சாவடி, கொங்கணாபுரம், சேலம், நாமக்கல் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த பருத்தி வியாபாரிகள், நூற்பு ஆலையினர் வந்திருந்து பருத்தியை ஏலத்தில் எடுத்துச் செல்வர்.

திங்கள்கிழமை நடைபெற்ற ஏலத்துக்கு 40 கிலோ கொண்ட 1,650 சுரபி ரக பருத்தி மூட்டைகள் கொண்டு வரப்பட்டன. குவிண்டால் ஒன்றுக்கு குறைந்தபட்சமாக ரூ. 5,802 முதல் அதிகபட்சமாக ரூ.7,236-க்கு விலைபோனது.

இதைத்தொடர்ந்து, பருத்தி விவசாயிகளுக்கு உடனடியாக பணம் பட்டுவாடா செய்யப்பட்டதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

**மானிய விலையில் நெல் விதை விநியோகம்**

ராசிபுரம்-நாமகிரிப்பேட்டை வேளாண்மைத் துறை மூலம் நெல் இயக்கம், விதைக் கிராமத் திட்டத்தின் கீழ் மானிய விலையில் நெல் விதைகள் விநியோகிக்கப்படுகின்றன.

இதுகுறித்து வேளாண் உதவி இயக்குநர்கள் வரதராஜு (ராசிபுரம்), வி.கிருஷ்ணவேணி (நாமகிரிப்பேட்டை) ஆகியோர் கூட்டாக வெளியிட்ட செய்திக் குறிப்பு:

ராசிபுரம் வட்டாரத்தில் நெல் விதைகள் மானிய விலையில் விநியோகம் செய்யப்படுகிறது. தற்போது நெல் நடவு செய்யும் பணி நடந்து வருகிறது. இந்த நிலையில் பொன்னி, ஏ.டி.டி., மற்றும் ராகி ஜி.பி.யு., 28 ஆகிய சான்று பெற்ற விதைகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. நெல் மற்றும் ராகி விதைகள் விதைக் கிராமத் திட்டத்தின் கீழ், 50 சத மானியத்தில் வழங்கப்பட்டு வருகிறது. விவசாயிகள் வேளாண்மை விரிவாக்க மையத்தைத் தொடர்பு கொண்டு, விதைகளை பெற்றுக் கொள்ளலாம்.

**ஜூலை 26-ல்  விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

திருச்சி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் வெள்ளிக்கிழமை (ஜூலை 26) காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்துக்கு மாவட்ட ஆட்சியர் ஜெயஸ்ரீ முரளிதரன் தலைமை வகிப்பார்.

கூட்டத்தில் நீர்ப்பாசனம், வேளாண்மை, இடுபொருள்கள், வேளாண் தொடர்பான கடனுதவிகள், விவசாய மேம்பாட்டுக்கான நலத் திட்டங்கள் மற்றும் வேளாண்மை தொடர்புடைய கடனுதவிகள் குறித்து நேரிலோ அல்லது மனுக்கள் மூலமாகவோ தெரிவிக்கலாம்.

விவசாயிகள், விவசாய

சங்கங்களின் பிரதிநிதிகள் கூட்டத்தில் பங்கேற்று பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சியர் ஜெயஸ்ரீ முரளிதரன் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

**தென்னை விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க வலியுறுத்தல்**

மழை இல்லாமல் பாதிக்கப்பட்ட தென்னை மரங்களுக்கு இழப்பீட்டுத் தொகையை வழங்க வேண்டும் என்று தமிழ்நாடு கள் இயக்கம் அரசை வலியுறுத்தியுள்ளது.

கரூரில் அண்மையில் நடைபெற்ற இந்த இயக்கத்தின் ஆலோசனைக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட இதர தீர்மானங்கள்:

சட்டப்பேரவைத் தேர்தலின் போது அளித்த வாக்குறுதியின்படி கள் மீதான தடையை நீக்க முதல்வர் ஜெயலலிதா நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழகத்தில் மதுவிலக்கை அமல்படுத்தும் வரை டாஸ்மாக் விற்பனை மது ரகங்கள் அனைத்தையும், பனை, தென்னை மூலப்பொருள்களை கொண்டே தயாரிக்க வேண்டும்.

சர்க்கரை ஆலைக் கழிவான மொலாசஸ் மூலப்பொருளாக கொண்டு, தரமற்ற மது வகைகளை தயாரித்து விற்பனை செய்வதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். கள்ளுக்கான தடையை நீக்கும் பொருட்டு முந்தைய திமுக அரசால் நியமிக்கப்பட்ட நீதிபதி சிவசுப்பிரமணியன் குழு அறிக்கை வெளியிடப்படாமல் உள்ளது. இக் குழுவின் பரிந்துரையின்படி மதுவிலக்கு மற்றும் மதுகொள்கை மாற்றியமைக்கப்பட வேண்டும்.

மழை இல்லாமல் காய்ந்து நிற்கும் தென்னை மரத்திற்கு ரூ. 10,000, பனை மரத்துக்கு ரூ. 5,000 நிவாரணத்தை அரசு வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்துக்கு தமிழ்நாடு கள் இயக்கத்தின் கள ஒருங்கிணைப்பாளர் நல்லசாமி தலைமை வகித்தார். தமிழக விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் மாரப்பன், கீழ் பவானி விவசாயிகள் நல சங்கத்தின் செயலர்கள் கோபிநாத், தங்கராசு, கரும்பு விவசாயிகள் சங்கத் தலைவர் ஆடிட்டர் நல்லசாமி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**பாரம்பரிய விவசாயம்தான் பாதுகாப்பானது**

நோயற்ற வாழ்வுக்கு பாரம்பரிய விவசாயம்தான் பாதுகாப்பு என்றார் இயற்கை வேளாண் விஞ்ஞானி கோ. நம்மாழ்வார்.

புதுக்கோட்டை அருகே வாகைப்பட்டி கிராமத்தில் உள்ள அன்பழகன் இயற்கை விவசாய பண்ணையில் ரோஸ் நிறுவனம் மற்றும் நபார்டு வங்கி சார்பில் பாரம்பரிய நெல் மற்றும் சிறுதானிய விதைத் திருவிழா செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதில் பங்கேற்று விவசாயிகளுக்கு பாரம்பரிய நெல் விதைகளை விநியோகித்து அவர் மேலும் பேசியது:

உலகில் உள்ள நாற்பது நாடுகளில், இன்று உணவுக்காக கலவரம் நடப்பதாக ஐ.நா.சபை பொதுச் செயலர் அறிவித்திருக்கிறார். உற்பத்தியாகும் உணவு தானியத்தில் 48 சதவிகிதம் கால்நடைத்தீவனமாக மாற்றப்படுகிறது. கோதுமை, சோயாமொச்சை, மக்காச்சோளம், கரும்பு போன்றவை டீசலாக

மாற்றப்படுகின்றன. உலகில் வாழும் மக்களில் பாதிப்பேருக்கு உணவுக்கு உத்தரவாதம் இல்லை. நம்முடைய முன்னோர்கள் நோய் எதிர்ப்பு சக்தி மிக்க, வறட்சியையும், வெள்ளத்தையும் தாங்கி வளரக்கூடிய பாரம்பரிய நெல் ரகங்களையும், சிறுதானியங்களையும் விளைவித்து நோயில்லா வாழ்க்கை வாழ்ந்தனர் என்றார் நம்மாழ்வார். விழாவில், கைவரைச்சம்பா, மிளகி, இலுப்பைப்பூசம்பா, செம்புளிச்சம்பா, கேழ்வரகு, குதிரைவாலி, சாமை மற்றும் திணை போன்ற சிறுதானிய ரகங்களின் விதைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.   விழாவில் நபார்டு வங்கி உதவி பொதுமேலாளர் எஸ். சோமசுந்தரம் மற்றும் அன்னவாசல், குண்ணன்டார்கோவில், பொன்னமராவதி, அரிமழம், திருமயம், கந்தர்வக்கோட்டை ஆகிய ஒன்றியங்களைச் சேர்ந்த விவசாயிகள் பங்கேற்றனர். முன்னதாக ரோஸ் நிறுவன திட்டப்பொறுப்பாளர் அகிலா வரவேற்றார்.

**மேட்டூர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை மாலை 81.57 அடியாக இருந்தது.**

மேட்டூர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை மாலை 81.57 அடியாக இருந்தது.அணைக்கு நொடிக்கு 19,973 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது.

அணையிலிருந்து நொடிக்கு 3,000 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

**5 ஆயிரம் ஏக்கரில் நுண்நீர் பாசனத் திட்டம்**

பெரம்பலூர் மாவட்டத்தில் நிகழாண்டு 5 ஆயிரம் ஏக்கரில் நுண்நீர் பாசனத் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது.

பெரம்பலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கூட்டரங்கில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற மாவட்ட அளவிலான நுண்நீர் பாசன விழிப்புணர்வு முகாமைத் தொடக்கி வைத்த ஆட்சியர் மேலும் பேசியது:

சாதாரண முறையில் நீரைப் பயன்படுத்துவதன் மூலம் கிடைக்கும் விளைச்சலை விட சொட்டுநீர்ப் பாசனத்தால் இரட்டிப்பு விளைச்சல் கிடைக்கிறது.

பெரம்பலூர் மாவட்ட விவசாயிகளில் 32 ஆயிரம் பேர் கிணற்றுப் பாசனத்தில் விவசாயம் செய்வதாகக் கணக்கெடுக்கப்பட்டுள்ளது.

இந்த விவசாய நிலங்களில் சொட்டுநீர் பாசனத்தை நடைமுறைப்படுத்த விவசாயிகள் முன்வர வேண்டும்.

மேலும் 5 ஏக்கருக்கு 100 சத மானியமாக அதாவது ரூ. 1 லட்சத்து 85 ஆயிரம் வழங்கப்படுகிறது.

இதுபோன்ற விவசாயத்திற்குப் பயன்படும் தெளிப்புநீர்ப் பாசனக் கருவிகள், மழை தூவுவான் கருவிகளை முன்னணி நிறுவனங்களிடமிருந்து பெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. கடந்தாண்டு 3 ஆயிரம் ஏக்கரில் சொட்டுநீர் பாசனத்தைச் செயல்படுத்தத் திட்டமிட்டு, அதற்கான முகாம்கள் நடத்தி விவசாயிகளிடமிருந்து மனு பெறப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

அதேபோல, நிகழாண்டு 5 ஆயிரம் ஏக்கரில் செயல்படுத்தும் நோக்கில் விவசாயிகளுக்கு முகாம்கள் நடத்தப்பட்டு மனுக்கள் பெறப்பட்டுள்ளன.

அனைத்து விவசாயிகளும் இத் திட்டத்தின் பயனை உணர்ந்து, அதிக லாபம் பெற முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்றார் ஆட்சியர்.

நிகழ்ச்சியில் ஒன்றியக் குழுத் தலைவர் ஆர்.பி. மருதராஜா, தோட்டக் கலைத் துறை துணை இயக்குநர் (பொ) மா. இந்திரா, வேளாண் இணை இயக்குநர் ப.

சங்கரலிங்கம், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்) கனகசபை உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்

**"கூடுதல் விலைக்கு காய்கனிகளை விற்றால் கடும் நடவடிக்கை**

தோட்டக்கலைத் துறைக்கு சொந்தமான ஹாம்காம்ஸில் கூடுதல் விலைக்கு காய்கனி விற்பனை செய்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று, கர்நாடக தோட்டக்கலைத் துறை அமைச்சர் ஷாம்னூர் சிவசங்கரப்பா தெரிவித்தார்.

கர்நாடக சட்ட மேலவையில் செவ்வாய்க்கிழமை உறுப்பினர் பி.லீலாவின் கேள்விக்குப் பதிலளித்து அவர் பேசியது:

பொதுமக்களுக்கு சிரமமில்லாமல் காய்கனிகளை விற்பனை செய்வதற்காக, தோட்டக்கலைத் துறை சார்பில் ஹாம்காம்ஸ்ஷ்கள் தொடங்கப்பட்டன. ஹாப்காம்ஸில் கூடுதல் விலைக்கு காய்கனிகளை விற்பனை செய்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். இதுதொடர்பாக இதுவரை 16 பேர் மீது புகார் பதிவு செய்யப்பட்டது. இவர்களில், 5 பேருக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளது. 9 பேர் மீது விசாரணை தொடங்கியுள்ளது.

தினமும் ஹாப்காம்ஸ் விற்பனை மையத்தின் முன்பு அன்றைய விலைப்பட்டியலை வைத்திருக்க வேண்டும். மேலும், பொதுமக்கள் காய்கனிகளின் விலைகளை 9243355223 என்ற கைபேசி எண்ணிலும் தெரிந்து கொள்ளலாம். 25 ஹாப்காம்ஸ் விற்பனை மையங்களைப் பரிசோதனை செய்ய ஒரு பரிசோதகர் நியமிக்கப்பட்டுள்ளார் என்றார் அவர்.

**கர்நாடகம் திறந்துவிட்ட தண்ணீர் இன்று அதிகாலை தமிழகம் வந்தது**

கர்நாடத்தில் பெய்து வரும் பலத்த மழையால் கிருஷ்ணராஜசாகர் அணை நிரம்பியது.

அணையின் பாதுகாப்பு கருதி உபரிநீர் காவிரியில் வெளியேற்றப்படுகிறது. இந்த உபரிநீர் தமிழக எல்லைப்பகுதியான பிலிகுண்டுலுவிற்கு இன்று காலை 5.30 மணிக்கு வந்தது. கிருஷ்ணராஜசாகர் அணையிலிருந்து திறந்துவிடப்படும் உபரிநீரின் அளவு சுமார் 4 ஆண்டுகளுக்குப் பிறகு அதிகரிக்கப்பட்டுள்ளது. இது படிப்படியாக மேலும் அதிகரிக்கப்படும் என தெரிகிறது.

**இன்று மழை பெய்ய வாய்ப்பு**

தமிழகம், புதுவையின் ஓரிரு இடங்களில் இன்று மழையோ இடியுடன் கூடிய மழையோ பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

செவ்வாய்க்கிழமை காலை வரையிலான நிலவரப்படி நடுவட்டத்தில் 60 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. சின்னக்கல்லாறு, வால்பாறையில் 40 மி.மீ. மழையும், குழித்துறை, தேவாலா, கூடலூர், அஞ்செட்டி, பெரியாறு, சோளிங்கரில் 20 மி.மீ. மழையும் பதிவாகியுள்ளது. கேட்டி, பாபநாசம், தாமரைப்பாக்கத்தில் 10 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

**மரபணு மாற்றுப்பயிர்: வயல்வெளி சோதனைக்கு நிரந்தரத் தடை வேண்டும்**



மரபணு மாற்றுப் பயிர்களுக்கான வயல்வெளிச் சோதனைகளை நிரந்தரமாகத் தடை செய்ய வேண்டும் என்று உச்ச நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட வல்லுநர் குழு பரிந்துரைத்துள்ளது. இக்குழு ஏற்கெனவே, உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த இடைக்கால அறிக்கையில், "பத்தாண்டுக்கு இந்திய வயல்வெளிகளில்

மரபணு மாற்றுப் பயிர்களுக்கான சோதனைகளை நடத்த தடை விதிக்க வேண்டும்' என்று பரிந்துரைத்திருந்தது. ஆனால், மத்திய அரசு அதை ஏற்கவில்லை.

இந்நிலையில், தனது இறுதி அறிக்கையை உச்ச நீதிமன்றத்தில், கடந்த வாரம் இக்குழு தாக்கல் செய்தது. அதில், மரபணு மாற்றுப் பயிர்களை வயல்வெளிகளில் சோதனைச் செய்வதற்கு நிரந்தரமாகத் தடை விதிக்க வேண்டும் என்று பரிந்துரைத்துள்ளது.

இந்தியாவில் மரபணு மாற்றப் பயிர்களை விளைவிக்க தமிழ்நாடு உள்ளிட்ட மாநில அரசுகள், அறிவியல் வல்லுநர்கள், அரசியல் கட்சிகள், விவசாயிகள் என்று பல தரப்பினரும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். இது தொடர்பாக, தில்லியில் கடந்த மாதம் போராட்டம் நடைபெற்றது.

இதனிடையில், மரபணு மாற்றம் செய்யப்பட்ட பயிர்களை விளைவிப்பதற்கான சோதனைகளை வயல்வெளிகளில் நடத்த மத்திய அரசு முயற்சி மேற்கொண்டது.

அவ்வாறான சோதனைகளை அனுமதிக்கக்கூடாது என்று உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. அந்த வழக்கில் உச்ச நீதிமன்றத்துக்கு ஆலோசனை அளிப்பதற்காக ஆறு பேர் கொண்ட தொழில் நுட்ப வல்லுநர் குழு அமைக்கப்பட்டது.

**வேளாண் படிப்புகளுக்கு அதிக வேலைவாய்ப்பு**

வேளாண்மை படிப்புக்கு அதிக வேலைவாய்ப்பு உள்ளது. குறிப்பாக வங்கி, காப்பீட்டுக் கழகங்கள் உள்ளிட்டவற்றில் அதிக வேலைவாய்ப்பு உள்ளது என அண்ணாமலைப் பல்கலைக்கழக நிர்வாகி ஷிவ்தாஸ்மீனா தெரிவித்தார்.

சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழக சாஸ்திரி ஹாலில் பி.எஸ்சி. வேளாண்மை, பி.எஸ்சி. தோட்டக்கலை முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான வகுப்பு தொடக்க விழா திங்கள்கிழமை நடைபெற்றது.

வேளாண்புல முதல்வர் ஆர்.எம்.கதிரேசன் தலைமை வகித்தார். உதவிப் பேராசிரியர் டி.பாலகிருஷ்ணன் வரவேற்றார்.

விழாவில் பல்கலைக்கழக நிர்வாகி ஷிவ்தாஸ்மீனா குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்து பேசியது: குறிப்பாக வேளாண் படிப்புப் படித்தவர்கள் அதிகம் பேர் ஐ.ஏ.எஸ். தேர்ச்சிப் பெற்றுள்ளனர். வேளாண் படிப்புக்கு 7,800 பேர் நுழைவுத் தேர்வு எழுதினர். இதில் கலந்தாய்வு மூலம் தகுதி அடிப்படையில் 1,605 பேர் தேர்வு செய்யப்பட்டு அனுமதி சேர்க்கை செய்யப்பட்டுள்ளனர்.

பொறியியல் மாணவர்களுக்கு 80 சதவீத வருகைப் பதிவேடும், வேளாண் மாணவர்களுக்கு 75 சதவீதம் வருகைப் பதிவேடும் இருந்தால் மட்டுமே தேர்வு எழுத அனுமதிக்கப்படுவர்.

நமது நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விவசாயம் உள்ளது. கடந்த ஆண்டு தமிழகத்தில் மழை பெய்யாததாலும், கர்நாடகம் நீர் திறந்துவிடாததாலும் சிதம்பரம் உள்ளிட்ட காவிரி டெல்டா பாசனப் பகுதிகளில் நெல் சாகுபடி முற்றிலும் பாதிக்கப்பட்டது. காவிரி டெல்டா பகுதிகளில் வறட்சி, வெள்ளம் என விவசாயம் தொடர்ந்து பாதிக்கப்படுகிறது. இதை நிவர்த்தி செய்ய வேளாண் மாணவர்கள் ஆய்வு மேற்கொள்ள வேண்டும் என ஷிவ்தாஸ்மீனா தெரிவித்தார்.விழாவில் பதிவாளர் (பொறுப்பு) என்.பஞ்சநதம், மாவட்ட வருவாய் அலுவலர்கள் தினேஷ்பொன்ராஜ்ஆலிவர், டி.கிருஸ்துராஜ் உள்ளிட்டோர் வாழ்த்துரையாற்றினர். உதவிப் பேராசிரியர் ஆர்.சுதாகர் நன்றி கூறினார்.

முன்னதாக பல்கலைக்கழக பொறியியல் புல பொன்விழா கலையரங்கில் பி.இ. முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான வகுப்புகள் தொடக்க விழா நடைபெற்றது.

பொறியியல் புல முதல்வர் ஆர்.வேலுசாமி தலைமை வகித்தார். பேராசிரியர் ஆண்டனி ஜெயசேகர் வரவேற்றார். நிர்வாகி ஷிவ்தாஸ்மீனா குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்துப் பேசினார்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**24.07.2013**

## பெரியாறு அணை நீர்மட்டம் 127 அடி

கூடலூர்:பெரியாறு அணை நீர்மட்டம், நேற்று 127 அடியை எட்டியது. அணைக்கு நீர்
வரத்து அதிகரித்துள்ளது.
பெரியாறு அணை நீர்
பிடிப்பு பகுதியில், நேற்று முன்தினம் இரவு பெய்த கன மழையால், அணைக்கு நீர்வரத்து, நேற்று காலை அதிகரித்து 3635 கன அடியாக இருந்தது. இதனால், அணையின் நீர்மட்டம் நேற்று ஒரு அடி உயர்ந்து 127 அடியாக இருந்தது.
தமிழகப்பகுதிக்கு, 1409 கன அடி நீர் திறந்து விடப்பட்டுள்ளது.
நீர் இருப்பு 4007 மில்லியன் கன அடி. நீர்பிடிப்பு பகுதியில் மழை பெய்வதால், நீர்மட்டம் மேலும் உயரும் வாய்ப்புள்ளது.
*வைகை அணை நீர்மட்டம் 49.70 அடியாக இருந்தது. நீர்வரத்து 1144 கன அடியாகவும், நீர்
திறப்பு 1960 கன அடியாக உள்ளது. நீர் இருப்பு 1954 மில்லியன் கனஅடி.
மழையளவு (மி.மீ.,): பெரியாறு 17, தேக்கடி 17.2, கூடலூர் 5.6.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் தொடர்ந்து உயர்வு

சத்தியமங்கலம்: நீலகிரி மலைப்பகுதியில் தொடர்ந்து மழை பெய்ததால் பவானிசாகர் அணைக்கு தண்ணீர் வரத்து அதிகரித்து, நீர்மட்டம், 70 அடியை தாண்டியது.

தென்னிந்தியாவின் மிகப்பெரிய மண் அணை என்ற பெருமை கொண்டது பவானிசாகர் அணை. இந்த அணையின் மொத்த உயரம், 120 அடியாகும். இதில் சகதிகள், 15 அடி கழித்து மொத்த நீர்மட்ட உயரம், 105 அடியாகும். மொத்த நீர் கொள்ளளவு, 32 டி.எம்.சி., ஆகும். இந்த அணையில் இருந்து கீழ்பவானி வாய்க்கால் மூலம் திறந்துவிடும் தண்ணீரால், ஈரோடு மாவட்டத்தை சேர்ந்த, 2.07 லட்சம் ஏக்கர் விவசாய நிலங்கள் பயன்பெறுகிறது. பவானி ஆற்றில் திறந்துவிடப்படும் தண்ணீரால் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை மற்றும் காளிங்கராயன் பாசனப்பகுதியை சேர்ந்த, 50 ஆயிரம் ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறுகிறது.கடந்த மாதம் இந்த அணையின் நீர்மட்டம் வெகுவாக குறைந்து, 29 அடியானது. கடந்த மாத இறுதியில் பவானிசாகர் அணையின் நீர்பிடிப்பு பகுதியான, நீலகிரி மலைப்பகுதியில் தென்மேற்கு பருவமழை துவங்கியதால், அணையின் நீர்வள ஆதாரமான பவானி ஆறு மற்றும் மோயாற்றில் தண்ணீர் வரத்து அதிகரித்தது. இதனால் அணையின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து, 60 அடியை தொட்டது.பின், பவானிசாகர் அணையில் இருந்து தடப்பள்ளி மற்றும் அரக்கன்கோட்டை பாசனப்பகுதிக்கு தண்ணீர் திறக்கப்பட்டது. தற்போது நீலகிரி மலைப்பகுதியில் மீண்டும் மழை பெய்து வருவதால், கடந்த சில நாட்களாக அணைக்கு வரும் தண்ணீர் அளவு அதிகரித்துள்ளது. நேற்று காலை, எட்டு மணியளவில் பவானிசாகர் அணையின் நீர்மட்டம், 70.28 அடியாக உயர்ந்தது. அணையில், 11.76 டி.எம்.சி., தண்ணீர் இருந்தது. பவானி ஆற்றில் பாசனத்துக்காக பவானிசாகர் அணையில் இருந்து வினாடிக்கு, 900 கனஅடி திறக்கப்படுகிறது. கீழ்பவானி வாய்க்காலில் குடிநீருக்காக வினாடிக்கு, 5 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டது.

## சொட்டுநீர் பாசனத்தில்குச்சிக்கிழங்கு விவசாயம்

சத்தியமங்கலம்: சத்தியமங்கலம் பகுதியில் குச்சிக்கிழங்கு பயிருக்கு விவசாயிகள் சொட்டுநீர் மூலம் தண்ணீர் பாய்ச்சி வருகின்றனர். ஆண்டு பயிர்களுக்கு மட்டுமே பயன்படுத்தி வந்த சொட்டுநீர் பாசனம், தற்போது குறுகிய கால பயிருக்கும் பயன்படுத்துவது குறிப்பிடத்தக்கது.சத்தியமங்கலம் பகுதியில் கடந்த இரண்டு ஆண்டுகளாக, போதிய மழை இன்றி வறண்டது. தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தும் வகையில், சொட்டுநீர் பாசன முறைகளை பல்வேறு பயிர்களுக்கு பயன்படுத்தி வருகின்றனர்.

கரும்பு, மஞ்சள் போன்ற ஆண்டு பயிர்களுக்கு மட்டுமே சொட்டுநீர் பாசனம் பயன்படுத்தப்பட்டது. இந்நிலையில், சொட்டுநீர் பாசனத்துக்கு அரசு மானியம் வழங்குவதால், தற்போது விவசாயிகள் குறுகிய கால பயிருக்கே சொட்டுநீர் பாசனம் பயன்படுத்த தொடங்கியுள்ளனர்.சத்தியமங்கலம் பகுதியில் உள்ள பெரியகுளத்தில் தற்போது குச்சிக்கிழங்கு பயிருக்கு சொட்டுநீர் மூலம் நீர் பாய்ச்சும் வசதியுடன், நடவு செய்யப்பட்டுள்ளது. இதனால் குறைந்த அளவு தண்ணீரில் முழுமையான மகசூல் பெரியமுடியும் என, விவசாயிகள் கருதுகின்றனர்.

## பருத்தி விலை வீழ்ச்சிகவலையில் விவசாயிகள்

சத்தியமங்கலம்: பருத்தி விலையில் திடீர் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதால், விவசாயிகள் விரக்தியடைந்துள்ளனர்.சத்தியமங்கலம் மற்றும் பவானிசாகர் பகுதியில், பத்தாயிரம் ஏக்கருக்கு மேல் விவசாயிகள் பருத்தி நடவு செய்துள்ளனர். இந்த பருத்தியின் அறுவடை கடந்த ஒரு மாதமாக நடந்து வருகிறது.தங்கள் வயலில் விவசாயிகள் சேகரித்த பருத்திகளை, சத்தியமங்கலம் - கோபி ரோட்டில் உள்ள தொடக்க வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் ஏலம் முறையில் விற்பனைக்கு கொண்டு வந்தனர்.ஒவ்வொரு வாரமும் செவ்வாய்கிழமை இங்கு பருத்தி ஏலம் நடப்பது வழக்கம்.நேற்று பல்வேறு பகுதிகளில் இருந்து விவசாயிகள்,

4,000 மூட்டை பருத்தி விற்பனைக்காக கொண்டு வந்திருந்தனர். அன்னூர், கோவை, ஈரோடு, பல்லடம், மேட்டுப்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வியாபாரிகள் வந்தனர்.நேற்று நடந்த ஏல விற்பனையில், ஒரு கிலோ பருத்தி, 47 முதல், 52 ரூபாய் வரை விற்பனையானது.கடந்த வாரம் ஒரு கிலோ பருத்தி, 57 ரூபாய் வரை விற்பனையானது குறிப்பிடத்தக்கது.கடந்த வாரத்தை காட்டிலும் நேற்று ஒரு கிலோ பருத்தி, ஐந்து வரை குறைந்திருப்பது பருத்தி விவசாயிகளை விரக்தியடைய வைத்துள்ளது.

## மக்கா சோளம் வரத்து குறைந்தது

சின்னசேலம்: சின்னசேலம் மார்க்கெட் கமிட்டிக்கு நேற்று 40 மூட்டைகள் மக்கா சோளம் வந்தன. சின்னசேலம் மார்க்கெட் கமிட்டிக்கு நேற்று 40 மூட்டைகள் மக்கா சோளம் வந்தன. அதிக விலை ரூ 1556 குறைந்த விலை ரூ 1521 விற்றது. எள் 7 மூட்டைகள் வந்தன அதிக விலை ரூ5769, குறைந்த விலை ரூ 4869க்கு விற்றன. சென்ற வாரம் மக்கா சோளம் 132 மூட்டைகள் வந்தன. கொள்முதல் ரூ 2 லட்சத்து ஆயிரம், எள் 20 மூட்டைகள் வந்தன. கொள்முதல் ரூ 1 லட்சத்து 24 ஆயிரம் ஆகும்.

## பூசணி பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம்

சின்னசேலம்: சின்னசேலம் பகுதிகளில் குறுகிய கால பயிரான பூசணி பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். சின்னசேலம் தாலுகாவில் கூகையூர், வீரபயங்கரம், தோட்டப்பாடி, எலவடி உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட கிராமங்களில் பூசணி பயிர் செய்து வருகின்றனர். மூன்று மாத பயிரான பூசணி ஜூலை மற்றும் ஜனவரி மாதத்தில் பயரிடப்படுகிறது. கோ 1, கோ 2 ரக விதை ஏக்கருக்கு 2-3 கிலோ வரை தேவைப்படுகிறது. 2-1.50 மீ இடைவெளியில் விதை நடவு செய்ய வேண்டும். வாரத்திற்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்ச வேண்டும். நோய் வராமல் இருப் பதற்கு வேப்ப எண்ணெய், டைனோகப் போன்ற மருந்தை 10 நாட்களுக்கு ஒரு முறை தெளிக்க வேண் டும். யூரியா, சூப்பர் பாஸ்

பேட் உரங்களை பயன்படுத்த வேண்டும். நடவு செய்த 45 நாட்களில் இருந்து அறுவடை செய்ய தொடங்கலாம். ஒரு எக்டர் 20 டன் வரை மகசூல் கிடைக்கும். ஒரு கிலோ 5-10 ரூபாய்க்கும், விழாக் காலங்களில் 50 முதல் 100 ரூபாய் வரை விற்கப்படும். பருவ மழை இல்லாததால் குறுகிய கால பயிரான பூசணி பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

## வேளாண் நிலையம்அசோலா விற்பனை

நாமக்கல்: "நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் அசோலா விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளது' என, திட்ட ஒருங்கிணைப்பாளர் மோகன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை:நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில், வேளாண் அறிவியல் நிலையம் உள்ளது. அங்கு, அசோலா விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளது.கால்நடை மற்றும் கோழிப்பண்ணை விவசாயிகள், பண்ணையாளர்கள், தங்கள் வயலில் உற்பத்தி செய்யவும், கால்நடைக்கு தீவனமாக அளிக்கவும் அசோலா வாங்கி பயன்படுத்தலாம். தகவல் அறிய, 04286 - 266345, 266650 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

## கோழி தீவனங்கள் விலை குறைய வாப்பு

புதுடில்லி:சோயா புண்ணாக்கு உள்ளிட்ட மூலப்பொருட்களின் விலை, வீழ்ச்சி கண்டு வருவதால், அவற்றின் மூலம் தயாரிக்கப்படும் கோழித் தீவனங்களின் விலை, சரிவடையும்.சென்ற வாரம், ஒரு டன் சோயா புண்ணாக்கு விலை, 1,185 ரூபாய்குறைந்து, 33,215 ரூபாயாக சரிவடைந்துள்ளது. அதுபோன்று, ஒரு குவிண்டால், கம்பு விலை, 30 ரூபாய்குறைந்து, 1,300 ரூபாயாக உள்ளது. ஒரு குவிண்டால் மக்காச் சோளம் விலை, 5 ரூபாய்குறைந்து, 1,485 -1,560 ரூபாய்என்ற அளவில் விற்பனை செ#யப்படுகிறது.ஒரு கிலோ, டை கால்சியம் பாஸ்பேட், 35 ரூபாயாகவும், ஒரு கிலோ எம்.பீ.எம்., விலை, 2 ரூபாய்குறைந்து, 33 ரூபாயாகவும் குறைந்துள்ளது.ஒரு டன் டீ.ஆர்.பீ விலை, மேலும், 200

ரூபாய்சரிவடைந்து, 10,800 ரூபாயாக வீழ்ச்சி கண்டுள்ளது. ஒரு டன், கடுகு புண்ணாக்கு விலை, ஏற்ற, இறக்கமின்றி, 14,800 ரூபாய்என்ற அளவில் உள்ளது. அதே சமயம், அரிசி தவிடு விலை, கிலோவிற்கு, 2 ரூபாய்அதிகரித்து, 54 ரூபாயாக உயர்ந்துள்ளது.ஒட்டுமொத்த அளவில், கோழித் தீவனத்திற்கான, மேகண்ட மூலப்பொருட்களின் விலை சரிவடைந்து உள்ளது. இதனால், கோழித் தீவனங்களின் விலையும், வரும் வாரங்களில் சரிவடையும் என, இத்துறை சார்ந்தவர்கள் தெரிவித்தனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**24.07.2013**

## நீடாமங்கலம் வேளாண் மையத்தில் விதைநெல் விற்பனை

நீடாமங்கலம், : நீடாமங்கலம் வேளாண் மை அறிவியல் நிலையத்தில் விதைநெல் விற்பனைக்கு உள்ளதாக நிலைய தலைவர் சோழன் தெரிவித்துள்ளார்.

திருவாருர் மாவட்டம் நீடாமங்கலம் வேளாண் மை அறிவியல் நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் சோழன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நடப்பாண்டு காவிரி டெல்டா பகுதிகளில் சம்பா சாகுபடிக்கேற்ற நெல் விதைகள் இருப்பு வைக்கப்பட்டு விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. விதை தேவையுள்ள விவசாயிகள் நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தை தொடர்பு கொள்ளலாம். சி.ஆர்.1009, மற்றும் டி.ஆர்.ஒய்&3 கிலோ ஒன்று ரூ.19க்கும், ஏ.டி.டி&46, ஏ.டி.டி&19 மற்றும் ஏ.டி.டி&50 ரக விதைகள் கிலோ ஒன்றுக்கு ரு.22 வீதம் விற்கப்படுகிறது. விவசாயிகள் தங்களுக்கு தேவையான விதைகளை பெற்றுக் கொள்ளலாம் என்று அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## சொட்டு நீர் பாசன விழிப்புணர்வு முகாம்

கிருஷ்ணராயபுரம், : கிருஷ்ணராயபுரம் வட்டாரம் பழைய ஜெயங்கொண்டசோழபுரத்தில் தோட்டக்கலை துறை மூலம் சொட்டு நீர் பாசன விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. முகாமில் கிருஷ்ணராயபுரம் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் ராஜேந்திரன் பேசியதாவது,

தேசிய நுண்ணீர் பாசன இயக்க திட்டத்தின் கீழ் சிறு, குறு விவசாயிகளுக்கு 5

ஏக்கர் வரை 100 சதவீதம் மானியத்திலும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீதம் மானியத்திலும் 12.5 ஏக்கர் வரை மானியத்தில் சொட்டு நீர் பாசனம் அமைக்கலாம். மேலும் தண்ணீர் பற்றாக்குறை உள்ள விவசாயிகள் தென்னை, கரும்பு போன்ற பயிர்களுக்கு சொட்டு நீர் பாசனம் அமைத்து பயன் பெறலாம். சொட்டு நீர் பாசனம் அமைப்பது பயன்கள், குறைந்த நீரில் அதிக பரப்பளவில் சாகுபடி மற்றும் களைகள் கட்டுப்படுத்துவது குறித்து தோட்டக்கலை அலுவலர் கலா பேசினார். முகாமில் பழையஜெயங்கொண்டம், தொட்டியப்பட்டி, அழகாபுரி, லட்சுமணம்பட்டி கிராமத்தை சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர். தோட்டக்கலை உதவி அலுவலர்கள் சந்திரசேகர், மூக்கையன் ஆகியோர் ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

**தென்னைக்கும் வறட்சி நிவாரணம் கணக்கெடுப்பு பணி துவக்கம்**

பழநி: தென்னை விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்குவதற்காக தற்போது கணக்கெடுப்பு பணி துவங்கப்பட்டுள்ளது. தமிழகம் முழுவதும் கடந்த 2 வருடங்களாக போதிய மழை பெய்யாததால் வறட்சி ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாய பணிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. விவசாயிகளின் நஷ்டத்தை தவிர்க்கும் பொருட்டு தமிழக அரசால் நெல், மக்காச்சோளம், சோளம் போன்ற பயிர் வகைகளுக்கு நிவாரணம் வழங்கப்படுகிறது.

ஆனால், தென்னை மற்றும் கரும்பு பயிர்களுக்கு நிவாரணம் வழங்கப்படாமல் இருந்தது. இந்நிலையில் தென்னைக்கும் இழப்பீடு வழங்க தமிழக அரசு முடிவு செய்துள்ளது. இதன்படி தென்னை மரங்கள் கணக்கெடுப்பு துவங்கி உள்ளது. அந்தந்த பகுதி கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வேளாண் அலுவலர்கள் மூலம் இப்பணி தற்போது நடைபெற்று வருகிறது. 50% மேல் பாதிப்பிற்குள்ளான தென்னை மரங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டவையாக கணக்கிட அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கணக்கெடுப்பு பணி முடிவடைந்த பின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் நிவாரணத்தொகை வழங்கப்படுமென வேளாண் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதுபோல் கரும்பு, கொய்யா போன்ற தோட்டக்கலை பயிர்களுக்கும் நிவாரணத்தொகை வழங்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை உயர்த்தினால் எந்த பாதிப்பும் ஏற்படாது**



புதுடெல்லி: முல்லைப் பெரியாறு அணை உறுதியாக உள்ளதாகவும் அணையின் நீர்மட்டத்தை உயர்த்தினால் எந்த பாதிப்பும் ஏற்படாது என்று தமிழக அரசு சார்பில் உச்ச நீதிமன்றத்தில் வாதிடப்பட்டது.முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 136 அடியிலிருந்து 142 அடியாக உயர்த்தக்கோரியும், தமிழகத்துக்கு உரிய தண்ணீரைத் தருமாறு உத்தரவிடக்கோரியும் உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு சார்பில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கு உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தபோது கேரள அரசு சார்பில் கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.ஆனால், தமிழக அரசுக்கு முல்லைப் பெரியாறு அணையில் உரிமை உள்ளதால் தொடர்ந்து தமிழக அரசு தனது வாதத்தை உச்ச நீதிமன்றத்தில் எடுத்து வைத்தது. ஆனால், அணையின் நீர்மட்டத்தை அதிகரிப்பதற்கு பதிலாக கேரள அரசு புதிய அணையைக் கட்டுவதில் குறியாக உள்ளது.

இதையடுத்து, முல்லைப் பெரியாறு அணையின் பலத்தை ஆய்வு செய்வதற்காக ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி ஆனந்த் தலைமையில் நிபுணர்கள் குழுவை உச்ச நீதிமன்றம் அமைத்தது. இந்த குழு முல்லைப் பெரியாறு அணையின் பலத்தை ஆய்வு செய்து உச்ச நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்தது.இந்நிலையில், இந்த வழக்கு உச்ச நீதிமன்ற நீதிபதி ஆர்.எம்.லோதா தலைமையிலான அரசியல் சாசன பெஞ்சில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது, தமிழக அரசு சார்பில் ஆஜரான வக்கீல் பாப்டே, “கடந்த 1886ம் ஆண்டு திருவாங்கூர் மகாராஜாவுடன் ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி முல்லைப் பெரியாறு அணையில் தமிழகத்துக்கு உரிமை உள்ளது. தற்போது, முல்லைப் பெரியாறு அணை முழுமையான பலத்துடன் உள்ளது. அணைக்கு எந்த பாதிப்பும் இல்லை. பல முறை நிலநடுக்கங்கள் வந்த சூழ்நிலையிலும் அணையில் ஒரு கீறலோ, பாதிப்போ ஏற்படவில்லை. அணை தொடர்பாக ஆய்வு செய்த நிபுணர்கள் குழுவும் அணை பலத்துடன்தான் உள்ளது என்று அறிக்கையில் கூறியுள்ளனர்.

எனவே, அணையின் நீர்மட்டத்தை 136 அடியிலிருந்து 142 அடியாக உயர்த்துவதில் எந்த பிரச்னையும் ஏற்படப்போவதில்லை. மாறாக கூடுதல் தண்ணீரைத் தேக்க வாய்ப்பு ஏற்படும். ஆனால், அணை பலவீனமாக உள்ளதால் புதிய அணையைக் கட்டுவோம் என்று கேரள அரசு கூறுகிறது. இது ஒப்பந்தத்துக்கு முரணானது. சட்ட விரோதமானதுÕ’ என்று வாதிட்டார். அப்போது நீதிபதிகள், 1886ல் திருவாங்கூர் மகாராஜாவுக்கும் மத்திய அரசுக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தம் இது. இதில் தமிழக அரசு எப்படி உரிமை கொண்டாட முடியும். பலவீனமான அணைக்கு பதிலாக புதிய அணை கட்டுவதில் தவறு இல்லையே. நீங்கள் சரியான புள்ளிவிபரங்களைத் தாருங்கள் என்றனர். அதற்கு தமிழக அரசு

வக்கீல், 'ஏற்கனவே போடப்பட்ட ஒப்பந்தங்கள் மீது மறு ஒப்பந்தம் போடப்படும் வரை உரிமை உள்ளது.

எனவே, இந்த விஷயத்தில் தமிழக அரசுக்கு அணை மீது உரிமை உள்ளது. அணையின் நீர்மட்டத்தை கூட்டினால் பொதுமக்களுக்கோ, உயிரினங்களுக்கோ எந்த பாதிப்பும் ஏற்படாது' என்றார். அப்போது, கேரள அரசு சார்பில் ஆஜரான ராஜீவ் தவான், முல்லைப் பெரியாறு அணை பலவீனமாக உள்ளதால் புதிய அணையைக் கட்ட கேரள அரசு 1000 கோடி ஒதுக்கியுள்ளது. புதிய அணை கட்டும்பட்சத்தில் தமிழகத்துக்கு உரிய தண்ணீர் தரப்படும். மின்சாரம் தயாரிக்கத் தேவையான தண்ணீரும் தரப்படும். இதனால், இரு மாநிலங்களுக்கும் பயன் ஏற்படும்' என்றார். இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள் விசாரணை நாளை மீண்டும் தொடரும் என்று உத்தரவிட்டனர்.

**மேட்டூர் அணை விரைவில் திறப்பு ஆறு, வாய்க்கால் சீரமைப்பு பணிகள் தீவிரம்**



தஞ்சை: கேரளா, கர்நாடகாவில், தொடர்ந்து கனமழை பெய்து வருவதால் கர்நாடகத்தில் உள்ள கபினி, கிருஷ்ணராஜசாகர் அணைகள் நிரம்பிவிட்டன. இரு அணைகளில் இருந்தும் திறக்கப்படும் உபரிநீர் முழுவதும் மேட்டூர் அணைக்கு வருகிறது. அணை விரைவில் திறக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.இந்நிலையில் தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்களில் நடைபெற்று வரும் ஆறு, வாய்க்கால் தூர் வாரும் பணிகளை விரைந்து முடிக்க

உத்தரவிடப்பட்டுள்ளது.கல்லணையில் இருந்து பிரிந்து செல்லும் கல்லணை கால்வாய் பகுதிகளில் நடைபெற்று வரும் சீரமைப்பு பணிகளை நீர்வள ஆதாரத்துறை முதன்மை தலைமை பொறியாளர் அசோகன், கீழ்காவிரி வடிநில கண்காணிப்பு பொறியாளர்(பொ) குமரேசன் மற்றும் அதிகாரிகள் நேற்று ஆய்வு செய்தனர்.

மேட்டூர் அணை திறப்பதற்கு முன்னோட்டமாக இந்த ஆய்வு பணிகள் நடக்கிறது.ஆய்வுக்கு முன் தஞ்சை பொதுப்பணித்துறை அலுவலகத்தில் கல்லணை கால்வாய், காவிரி, வெண்ணாறு ஆகிய ஆறுகளின் செயற்பொறியாளர்கள், உதவி செயற்பொறியாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. மேட்டூர் அணை திறப்பு குறித்தும், அதுதொடர்பாக 5 அமைச்சர்கள் பங்கேற்கும் கூட்டத்தை கூட்டுவது குறித்தும் இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. மேட்டூர் நீர்மட்டம் 100 அடியை எட்டினால்தான் சம்பா சாகுபடியை கவலையின்றி மேற்கொள்ள முடியும் என்பது டெல்டா விவசாயிகள் கூறுகின்றனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**24.07.2013**

**கொள்ளிடம், சீர்காழி பகுதியில் பாசன வாய்க்கால்களை தூர்வார ரூ.41½ லட்சம் ஒதுக்கீடு கலெக்டர் தகவல்**

கொள்ளிடம்,

கொள்ளிடம், சீர்காழி பகுதியில் பாசன வாய்க்காலை தூர்வார ரூ.41½ லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று, கலெக்டர் முனுசாமி கூறினார்.

<u>நிதி ஒதுக்கீடு</u>

நாகை மாவட்டம், கொள்ளிடம் அருகே புதுமண்ணியாறு பாசனவாய்க்கால் உள்ளது. இந்த வாய்க்காலை தூர்வாரும் பணியை, மாவட்ட கலெக்டர் முனுசாமி ஆய்வு செய்தார். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:–

புதுமண்ணியாறு பாசன வாய்க்கால் மொத்தம் 36 கிலோ மீட்டர் தூரம் உள்ளது. அதில் கோபாலசமுத்திரம் கிராமத்தில் இருந்து நான்கு கிலோ மீட்டர் தூரத்துக்கு தூர்வாரும் பணி தற்போது தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. கொள்ளிடம் மற்றும் சீர்காழி பகுதியில் பாசன வாய்க்கால் தூர்வாரும் பணிக்கு ரூ.41½ லட்சமும், பாசனவாய்க்காலில் மதகு, தடுப்புச்சுவர் போன்ற கட்டுமானப்பணிக்கு என ரூ.79¾ லட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

<u>கட்டுமானப் பணிகள்</u>

பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடுவதற்குள், அடுத்த மாதம் 15–ந் தேதிக்குள் வாய்க்கால் முழுவதும் தூர்வாரும் பணி மற்றும் கட்டுமானப் பணிகள் முடிவடைந்து விடும். இவ்வாறு அவர் கூறினார். ஆய்வின் போது மயிலாடுதுறை காவிரி வடிநிலக்கோட்ட செயற்பொறியாளர் பக்தவத்சலம், சீர்காழி உதவி செயற்பொறியாளர் மனோகரன், உதவி பொறியாளர்கள் ஞானசேகரன், முனுசாமி ஆகியோர் இருந்தனர்.

**மடத்துக்குளம் பகுதியில் வெங்காயம் சாகுபடி தீவிரம்**

மடத்துக்குளம்,

மடத்துக்குளம் பகுதிகளில் வெங்காயம் சாகுபடி தீவிரம் அடைந்து உள்ளது.

<u>விவசாயம்</u>

திருப்பூர் மாவட்டம் மடத்துக்குளம் சுற்றுவட்டார பகுதிகளில் விவசாயம் பிரதான தொழிலாக உள்ளது. தென்னை, கரும்பு விவசாயத்திற்கு அடுத்தபடியாக காய்கறி சாகுபடியில் அதிக அளவில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

தற்போது மடத்துக்குளம் சுற்று வட்டார பகுதி, சாளரப்பட்டியில் ஒரிய ரக வெங்காய சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இந்த ரக வெங்காயம், வழக்கமான சின்ன வெங்காயத்தை விட அதிக எடையும், பெரிதாகவும் இருக்கும்.

ஒரிய ரக வெங்காயம் சாகுபடி குறித்து விவசாயி சிவசாமி கூறியதாவது:–

<u>நாற்றங்கால் முறை</u>

ஒரிய ரக வெங்காயம் நாற்றங்கால் முறையில் சாகுபடி செய்யப்படுகிறது. ஒரிய ரக வெங்காய சாகுபடி செய்ய 1 ஏக்கருக்கு 1 கிலோ விதை தேவைப்படுகிறது. விதைகளை கொண்டு முதலில் நாற்று நடப்படும். பின்னர் 40 நாட்கள் கழித்து

நடவு செய்யப்படும். விதை, உழவு, உரம், களை எடுத்தல், மருந்து தெளித்தல் என ஏக்கருக்கு ரூ.40 ஆயிரம் வரை செலவு ஆகிறது. இந்த வெங்காயம் சுமார் 80 முதல் 85 நாட்களில் அறுவடைக்கு தயாராகிறது. இதனால் ஏக்கருக்கு 7 முதல் 8 டன் வரை மகசூல் கிடைக்கிறது.

கடந்த ஆண்டு ஒரு கிலோ ஒரிய ரக வெங்காயம் ரூ. 6 முதல் 7 வரை விற்பனை செய்யப்பட்டது. தற்போது ரூ.50 முதல் 65 வரை விற்பனையாகிறது. மேலும் இந்த ரக வெங்காயத்தை உடுமலை, திண்டுக்கல் உள்பட பல்வேறு பகுதிகளில் இருந்து வியாபாரிகள் நேரடியாக கொள்முதல் செய்து செல்கின்றனர். மேலும் வெளி மாநிலங்களுக்கும் இந்த ரக வெங்காயம் அதிக அளவு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இவ்வாறு விவசாயி சிவசாமி கூறினார்.

**மூலனூர் ஒன்றிய பகுதியில் மானியவிலையில் இடுபொருள் வினியோகம்வேளாண்மை உதவி இயக்குனர் தகவல்.**

மூலனூர்,

அமராவதி நீர் பிடிப்பு பகுதிகளில் தற்போது பருவமழை துவங்கியுள்ளதால் மூலனூர் வட்டாரத்தில் உள்ள அமராவதி உபவடிநிலப்பகுதி மற்றும் நல்லதங்காள் ஓடை பாசனபகுதிகளில்

உள்ள விவசாயிகளுக்கு மூலனூர் வேளாண்துறை மூலம் நீர்வள நிலவள திட்டத்தில் கீழ்காணும் செயல்விளக்கதிடலுக்கான இடுபொருள் மானிய விலையில் வழங்கப்படுகிறது.

பசுந்தாள் உரவிதைகள், திருந்திய நெல் சாகுபடிக்கான இடுபொருள்கள் மற்றும் இரசாயன உரங்கள், பயறுவகை விதைகள் பயறுவகை விதைகள் ஆகியவை ஹெக்டேருக்கு ரூ.9000– மானியத்திலும், மக்காசோள செயல்விளக்கத்திடலுக்கான இடுபொருட்கள் (வீரிய ஒட்டு விதைகள் மற்றும் உரங்கள்) ஹெக்டேருக்கு ரூ.4000– மானியத்திலும் பயறுவகை பயிர்களுக்கான

செயல் செயல்விளக்கத்திடல் இடுபொருள்கள் (விதை மற்றும் இரசாயன உரங்கள்) ஹெக்டேருக்கு ரூ.2500–

மானியத்திலும் நிலக்கடலை செயல்விக்கத்திடலுக்கான இடுபொருள்கள் (இரசாயன உரங்கள் நுண்ணுட்டம் மற்றும் உயிர் உரங்கள் மற்றும் உயிர்உரங்கள்) ஹெக்டேருக்கு (175மரங்கள்)

ரூ.10000– மானியத்தில் வழங்கப்பட்டுவருகிறது. மேலும் கைத்தெளிப்பான் மற்றும் விசைத்தெளிப்பான்கள் 50–சதவீத மானியத்தில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது எனவே மூலனூர் வட்டாரத்தைச் சேர்ந்த விவசாயிகள் மேற்கொண்ட இடுபொருள்களை மானிய விலையில்

பெற அந்தந்த பகுதி உதவி வேளான்மை அலவலர்களையோ அல்லது வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகத்தையோ தொடர்பு கொண்டு மானிய உதவிகளை பெற்று பயன்பெறலாம் என்று மூலனூர் வேளாண்மை உதவி இயக்குனர் ஞாண சேகரன் தெரிவித்தார்.

**முல்லைப்பெரியாறு அணை நீர்மட்டம் ஒரே நாளில் 1 அடி உயர்வு**

கூடலூர்,

முல்லைப்பெரியாறு அணை நீர்மட்டம் ஒரே நாளில் 1 அடி உயர்ந்துள்ளது.

<u>முல்லைப்பெரியாறு</u>

முல்லைப்பெரியாறு அணை நீர்ப்பிடிப்பு பகுதி களில் கடந்த ஒரு மாதகாலமாக தென்மேற்கு பருவமழை சாரலாக நீடித்து வருகிறது. இதன் காரணமாக அணைக்கு நீர்வரத்து அதிகரித்து காணப் படுகிறது. நேற்று முன்தினம் அணைக்கு வினாடிக்கு 3,112 கனஅடியாக காணப்பட்ட நீர்வரத்து, நேற்று வினாடிக்கு 3,635 கன அடியாக உயர்ந்து காணப் பட்டது. இதன் எதிரொலியாக அணை நீர்மட்டம் நேற்று மாலையில் 127.10 அடியாக உயர்ந் துள்ளது. நேற்று முன்தினம் அணை

நீர்மட்டம் 125.90 அடியாக காணப்பட்ட நிலையில் நேற்று ஒரே நாளில் அணைநீர்மட்டம் சுமார் 1 அடி உயர்ந்துள்ளது. அணையில் இருந்து வினாடிக்கு 1,424 கன அடி நீர் திறந்து விடப்படுகிறது. அணையில் 4,007 மில்லியன் கன அடிநீர் இருப்பு உள்ளது.

வைகை அணை

71 அடி உயர வைகை அணையின் நீர்மட்டம் நேற்று காலையில் 49.70 அடியாக காணப்பட்டது. அணைக்கு வினாடிக்கு 1,144 கனஅடியாக நீர்வரத்து அதிகரித்து காணப் படுகிறது. அதே நேரத்தில் அணையில் இருந்து வினாடிக்கு 1,960 கன அடி நீர், பாசனம் மற்றும் குடிநீர் தேவைக்காக திறக்கப் படுவதால் அணை நீர்மட்டம் உயரும் வாய்ப்பு குறைந்து காணப்படுகிறது.

நேற்று முன்தினம் முல்லைப் பெரியாறு அணைப்பகுதியில் 17 மில்லிமீட்டரும், தேக்கடியில் 17.2 மில்லிமீட்டரும், கூடலூரில் 5.6 மில்லிமீட்டரும் மழை பதிவாகி உள்ளது. அதே நேரத்தில் நேற்று காலையிலும் முல்லைப்பெரியாறு அணை மற்றும் கூடலூர் பகுதியில் சாரல் மழை அவ்வப்போது பெய்தது குறிப்பிடத்தக்கது.